**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in


---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 01.03.2025

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் காகித அடிப்படையிலான பொருட்கள் உற்பத்தி குறித்த திறன் மேம்பாட்டுப் பயிற்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 15.13.2025 காகித அடிப்படையிலான பொருட்கள் உற்பத்தி குறித்த திறன் மேம்பாட்டுப் பயிற்சி நடைபெற உள்ளது. வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூரில் உணவு பதன்செய் பொறியியல் துறையின் கீழ் செயல்படும் மாதிரி காகித ஆலை, விவசாய கழிவுகள் மற்றும் கழிவு காகிதங்களைப் பயன்படுத்தி காகித அடிப்படையிலான பொருட்களை தயாரிப்பதற்காக 1976 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இயந்திரங்கள், அதாவது காகித துண்டாக்கி இயந்திரம், காகித கூழ் தயாரிக்கும் இயந்திரம், அட்டை தயாரிக்கும் இயந்திரம், அட்டை நேர்த்தி இயந்திரம், உலர்த்தி, அச்சு இயந்திரம் போன்றவை, கழிவுப் பொருட்களில் இருந்து காகித அடிப்படையிலான பொருட்களை தயாரிப்பதற்காக நிறுவப்பட்டுள்ளன.

**பயிற்சியில் பின்வரும் தயாரிப்புகள் கற்றுக் கொடுக்கப்படவுள்ளன**:

- அலுவலக கோப்புகள்
- ஸ்பிரிங் கோப்புகள்
- நாடா கோப்புகள்

**பயிற்சி இடம் –** மாதிரி காகித ஆலை
உணவு பதன்செய் பொறியியல் துறை
வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்;
கோயம்புத்தூர்– 641 003

**பேருந்து நிறுத்தம்:**
தாவரவியல் பூங்கா, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்

**பயிற்சி கட்டணம்:**
ஆர்வமுள்ள நபர்கள் பயிற்சிக் கட்டணமாக ரூ.1000/– (ரூபாய் ஆயிரம், 18% ஜிஎஸ்டியை உள்ளடக்கியது) பயிற்சி தொடங்கும் நாளில் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:**

பேராசிரியர் மற்றும் தலைவர்
உணவு பதன்செய் பொறியியல் துறை
வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்;
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்;
கோயம்புத்தூர்– 641 003
மின்னஞ்சல்: processing@tnau.ac.in
தொலைபேசி: 8668041185

*மக்கள் தொடர்பு அலுவலர்*